கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.

அசல் வழக்கு எண். 1/2023 நாள். 15.06.2026

வாதி தரப்பு சாட்சி எண். 1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : கார்த்திகா தேவி என்ற ரேவதி | ஊர் | : | தேனி |
| கணவர் பெயர் | : சௌந்திரபாண்டியன் | தாலுகா | : | தேனி |
| தொழில் | : இல்லத்தரசி | வயது | : | 41/2026 |

ஆணையுறுதி சட்டப்படி சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார். 1908ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

வாதி தரப்பில் 1 ம் சாட்சியின் முதல் விசாரணை:

நான் இந்த வழக்கின் 2 ஆம் மைனர் வாதியின் கார்டியன் ஆவேன். எனது தரப்பில் நிருபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நான் தாக்கல் செய்யும் நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் எனக்கு தெரியும். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனது நிருபண வாக்குமூலத்தில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மையானவைகள் ஆகும். எனது தரப்பில் கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. 01.06.2022 ஆம் தேதியிட்டு நான் எனது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் அசல் அஞ்சலக ரசீதுடன் வா.சா.ஆ. 1

2. நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதை காட்டக்கூடிய அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் வா.சா.ஆ. 2

3. 06.12.2018 ஆம் தேதியிட்ட ராசு என்பவருக்கு லட்சுமி வகையறா எழுதி கொடுத்த பதிவு கிரைய பத்திரத்தின் சார்பதிவாளர் நகல் ஆவண எண்.3101/2018 வா.சா.ஆ. 3

4. 31.01.2011 ஆம் தேதியிட்டு பிரதிவாதிக்கு பாப்பாத்தியம்மாள், நாகராஜ்,பிரியா ஆகியோர் சேர்ந்து எழுதி கொடுத்த பதிவு பாக பாத்திய விடுதலை ஆவணத்தின் சார்பதிவாளர் நகல் ஆவண எண்.258/2011 வா.சா.ஆ. 4

5. 07.12.2018 ஆம் தேதியிட்டு லட்சுமி வகையறா பாப்பாத்தி, சௌந்திரபாண்டி, நாகராஜ், பாண்டீஸ்வரி என்ற பிரியா ஆகியோர்களுக்கு எழுதி கொடுத்த பதிவு கிரைய பத்திரத்தின் சார்பதிவாளர் நகல் ஆவண எண்.3102/2018 வா.சா.ஆ. 5

6. 1,2 வாதிகளின் ஆதார் அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகல்கள் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. அது. வா.சா.ஆ. 6

7. எனது ஆதார் அடையாள அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. அது. வா.சா.ஆ.7

வாதி பிராதில் கோரியபடி தீர்ப்பாக வேண்டி பிரார்த்திக்கிறேன்.

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

(பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது).

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

(Sd/– C. Sankar)
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,
பெரியகுளம்.